**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பரங்கிப்பேட்டை.**

**2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ஆம் நாள்,**

**CC 183 /2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 21.01.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அர்ஜுனன் | வயது | : | 61 |
| த.பெ | : | கதிர்வேல் | நிலை | : | **PW-1 (Cross)** |

**A1,A3 are present with counsel. A2 has died. Learned APP is Present.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) ஆஜர் எதிரிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் பழனிவேல்(A1) என் தம்பியின் மச்சான், தையல்நாயகி (A3) என் தம்பியின் கொழுந்தியாள். என் தம்பியின் பெயர் ராஜேந்திரன். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் வீட்டிலும், மருத்துவமனையிலும் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடந்து எப்பொழுது மருத்துவமனையில் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்த அன்றே மருத்துவமனையில் போலிசார் விசாரித்தனர். சம்பவம் நடந்து எத்தனை நாள் கழித்து வீட்டில் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சம்பவம் நடந்து 5 நாட்கள் கழித்து வீட்டிற்கு வந்து போலிசார் விசாரித்தனர்.அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் உள்ள வாசகங்கள் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, நான் போலிசாரிடம் கொடுத்த புகாரின் அடிப்படையிலே உள்ளது அதில்தான் நான் கைரேகை வைத்தேன். வழக்கு சம்பவமானது புளியமரத்தின்கீழ் என் தம்பிக்கும், எனக்கும் சண்டை நடந்து என்றால் சரிதான்.

2) வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் மரச்சட்டத்தை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எனக்கும் என் தம்பிக்கும் இடையே சொத்து பிரிவினை செய்யபட்டுவிட்டதா என்றால் இல்லை. ஆஜர் எதிரிகள் வெளியூர்காரர்கள் என்றாலும் அவர்களுடைய தங்கையிடம் பிரச்சனை செய்ததால் என்னிடம் கேட்கதான் வந்தார்கள் என்றாலும் சரியல்ல. நான் புளியமரத்திலிருந்து கீழே

விழுந்ததால்தான் எனக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல, ஆஜர் எதிரிகள்தான் என்னை அடித்து காயங்கள் ஏற்படுத்தினார்(வழக்கு சம்பவத்தின்போது ஏற்பட்ட காயத்தால் என் வலது கை சரியாக செயல்படாததால் என்னால் தற்போதுவரை வேலைக்கு செல்லவே முடியவில்லை என்றுகூறியும் நான் பொய்யாக புகார் கொடுக்கவில்லை என்றுகூறியும் சாட்சி தேம்பி அழுகிறார்).

3) வழக்கு சம்பவத்தின்போது என் ஊர்க்காரர்கள் வந்து கேட்டார்களா என்றால் எல்லோரும் வேலைக்கு சென்றுவிட்டதால் யாரும் கேட்கவில்லை. வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளின்மீது பொய்யாக புகார் கொடுக்கபட்டு வழக்கு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தம்பி கொடுத்த புகாரில் எங்கள்மீது CC 174/2014 என்று வழக்கு பதியப்பட்டு இந்நீதிமன்றத்தில் நான் அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான், என் தம்பியிடம் நடந்த சண்டை தொடர்பாகத்தான் எதிரிகள் என்னை வந்து அடித்தனர். என் தம்பியுடன் நடந்த சண்டையும், எதிரிகளுடன் நடந்த சண்டையும் ஒரே நாளில் நடந்து என்றால் சரியல்ல, என் தம்பியுடன் 23-03-2014 அன்று சண்டை நடந்தது, எதிரிகள் 24-03-2014 அன்று வந்து என்னிடம் பிரச்சனை செய்து சண்டை செய்தனர். CC 174/2014 என்ற வழக்கின் சம்பவம்தான் உண்மையானது என்றாலும் இவ்வழக்கு சம்பவம் பொய்யாக ஜோடிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியெனை கையொப்பமிட்டார்.**

**(ஓம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**

**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**பரங்கிப்பேட்டை.**

**2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ஆம் நாள்,**
**CC 183 /2014**

The Oaths Act 1969 (Act 44/1969)-ன் விதிமுறைகளின் படி 21.01.2026-ஆம் தேதியன்று பரங்கிப்பேட்டை, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திரு.த.யுவராஜ் அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தனபாக்கியம் | வயது | : | 55 |
| க.பெ | : | முருகன் | நிலை | : | **PW-2 (Cross)** |

**A1,A3 are present with counsel. A2 has died. Learned APP is Present.**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -** வழக்கு சம்பவம் நடக்கும்போது நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். சண்டை நடக்கும்போது சத்தம் கேட்டுதான் நான் வந்து பார்த்தேன் என்றால் சரியல்ல, என்னிடமும் எதிரிகள் சண்டை செய்தனர். வழக்கு சம்பவம் புளியமரத்தின்கீழ் நடந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்து எப்பொழுது போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சுமார் 10 நாட்கள் கழித்து வீட்டில் விசாரித்தனர். மருத்துவமனையில் எப்பொழுது போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சண்டை நடந்த அன்றே மருத்துவமனையில்  விசாரித்தனர். வழக்கு சம்பவத்தில் அடித்ததாக சொல்லப்படும் மரச்சட்டத்தை போலிசார் எடுத்து சென்றார்களா என்றால் இல்லை. எனது தம்பி ராஜேந்திரனிடம் நானும், அ.சா.1 அர்ஜுனனும் பிரச்சனை செய்தது சம்மந்தமாக எதிரிகள் எங்களிடம் கேட்கவந்தபோது நாங்கள்தான் எதிரிகளிடம் சண்டை செய்தோம் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்தின்போது ஊர்க்காரர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டார்களா என்றால் இல்லை. அ.சா.1-ற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காட்டிய பின்பு அவர் சரியென கையொப்பமிட்டார்.**

**(ஒம். திரு.த.யுவராஜ்)**
**மாவட்ட உரிமையியல் மற்றும்  நீதித்துறை நடுவர்,**
**பரங்கிப்பேட்டை.**